DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அன்புசெல்வன் | Caste | : | |
| Father Name | : | கண்ணபிரான் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **17.03.2026.**

**PW - 20**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, புள்ளம்பாடி தீயணைப்பு நிலைய அலுவலர், போக்குவரத்தில் பொறுப்பு பதவியிலிருந்து பணி ஓய்வு பெற்றேன். கடந்த 19.01.2020 அன்று நான் புள்ளம்பாடி தீயணைப்பு துறையில் நிலைய அலுவலராக பணியிலிருந்தபோது கைப்பேசியில் புள்ளம்பாடி புதுவாய்க்கால் அருகே பிரேதம் செல்வதாகவும், அதை மீட்க வேண்டுமென்றும் தகவல் வந்தது. நான் எனது குழுவினருடன் அங்கு சென்றேன். மேற்படி புதுவாய்க்காலில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதத்தை குழுவினருடன் சேர்ந்து தண்ணீரிலிருந்து மீட்டு கரையில் வைத்தோம். பிரேதத்தின் உடலில் வெட்டுக்காயமிருந்தது. இறந்தவரின் மகன் குணசேகரன் என்பவர் இறந்தவரின்

பெயர் பெரியசாமி என்றும், அவர் அவரது தந்தை என்றும் எங்களிடம் சொன்னார். பிறகு போலிசார் வந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நாங்கள் பிரேதத்தை மீட்க மேற்படி புதுவாய்க்காலுக்கு சென்றபோது இறந்தவரின் உறவினர்கள், ஊர்க்காரர்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். எங்களது மீட்பு குழுவினரின் உதவியுடன்தான் பிரேதத்தை தண்ணீரிலிருந்து மீட்டோம். இறந்தவரின் உறவினர்கள் அருகில் இருந்தார்கள். இறந்தவரின் உடலில் துணி இல்லை. எங்கள் அலுவலகத்திலிருந்து பாடி கவர் எடுத்து சென்றோம். அதில் மூடிதான் பிரேத்தை தண்ணீரிலிருந்து எடுத்து தரையில் போட்டோம். இறந்தவரின் கழுத்தில் துண்டு இருந்ததாக அவரது உறவினர்கள் சொல்லியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிரேதத்தை மீட்டபிறகு 5 மாதம் கழித்துதான் என்னை விசாரித்தார்கள் என்றால் பிரேதத்தை மீட்ட அன்றே என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். பாடியை நான் யாரிடம் ஒப்படைத்தேனோ, அந்த காவல் அதிகாரிதான் என்னை விசாரித்தார். இறந்தவரின் உடலில் துண்டு இருந்தது என்றும், அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.